பொழுது, இப்பொழுது ஏற்படுகின்ற மாதிரியான வறட்சி நிலைமை வரும் போது, அந்த அணையைப் பயன்படுத்துவது என்பது முக்கியமான ஒன்று. எனவே, அது வரவேற்கத்தக்க திட்டமே தவிர, அதிலே செலவு எவ்வளவு, வரவு எவ்வளவு என்று நாம் கணக்கு பார்க்க வேண்டியதில்லையென்று கருதுகிறேன்.

உத்திரமேரூர் தாலுகாவில் "இடமிச்சி" ஏரித் திட்டம்.

*வினா எண். 939—திரு. எஸ். ஜகத்ரட்சகன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுகாவை சார்ந்த "இடமிச்சி ஏரித் திட்டம்" எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூர் அணைக்கட்டிலிருந்து துணைக் கால்வாய் மூலம் இடமாய்ச்சி ஏரிக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வு ஆய்வில் உள்ளது.

கும்புப்பள்ளம் அணைத் திட்டம்.

*வினா எண். 940—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் வட்டம் கும்புப்பள்ளம் அணைத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, விவர மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தள அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? எவ்வளவு பாசன வசதி பெறும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?